

தலைமைச் செயலகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் 28.08.2024 அன்று, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் சட்டமன்ற அறிவிப்புகள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநர் எஸ்.கணேஷ், மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் திருமதி சுதா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் 26.08.2024 அன்று பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, வாடிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ஜோதீஸ்வரன் உட்பட பலர் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி

# திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஆக.30-

திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அடுத்தாண்டு ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs) வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பயட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைந்த வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பட்டு அன்றிலிருந்து நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும். 2025ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வழங்கலாம்.



அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLOs), வாக்கு பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றிற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். வயதுக்கான சான்றாக, பிறப்பு சான்றிதழ், ஆதார், பான் அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்பு சான்றிதல், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம் ஆகும்.

மேலும் *http://voters.eci.gov.in*, *https://voterportal.eci.gov.in* ஆகிய இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி (VOTER HELPLINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணியில் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலைமுகவர்களுடன் (BLA2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய, நகர பொது உறுப்பினர் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய,நகரபொதுஉறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெறுகிறது. அதுசமயம் மாவட்டத்தில் உள்ளபொதுஉறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| நேரம் | ஒன்றியம் / நகரம் | இடம் |
|---|---|---|
| **28.08.2024 புதன்கிழமை** | | |
| மாலை 05.00 மணி | செந்துறை வடக்கு | ஏ.வி.ஆர். திருமண மஹால் ஆதனக்குறிச்சி |
| இரவு 07.00 மணி | செந்துறை தெற்கு | ஞானாம்பாள் திருமண மஹால் செந்துறை |
| **29.08.2024 வியாழக்கிழமை** | | |
| காலை 09.00 மணி | திருமானூர் கிழக்கு | எஸ்.ஆர்.எம் திருமண மஹால் திருமானூர் |
| பகல் 11.00 மணி | திருமானூர் மேற்கு | ஆர்.எஸ். மஹால் கீழப்பழூர் |
| பகல் 12.00 மணி | அரியலூர் நகரம் | எஸ்.டி.மேரிஸ் மஹால் அரியலூர் |
| மாலை 04.00 மணி | தா.பழூர் மேற்கு | சூர்யா மஹால், விக்கிரமங்கலம் |
| மாலை 05.00 மணி | அரியலூர் தெற்கு | அரியதங்கம் திருமண மஹால் சுண்டக்குடி |
| இரவு 07.00 மணி | அரியலூர் வடக்கு | லால்குடியார் மண்டபம், கல்லங்குறிச்சி |

| நேரம் | ஒன்றியம் / நகரம் | இடம் |
|---|---|---|
| **01.09.2024 ஞாயிற்றுக்கிழமை** | | |
| காலை 09.00 மணி | ஆண்டிமடம் தெற்கு | சுவாதி மஹால், காட்டாத்தூர் |
| பகல் 11.00 மணி | ஆண்டிமடம் வடக்கு | வன்னியர் மஹால், ஆண்டிமடம் |
| பகல் 12.00 மணி | ஜெயங்கொண்டம் வடக்கு | கே.டி.வி. மஹால், ஜெயங்கொண்டம் |
| மாலை 04.00 மணி | ஜெயங்கொண்டம் நகரம் | கே.டி.வி. மஹால், ஜெயங்கொண்டம் |
| மாலை 05.00 மணி | ஜெயங்கொண்டம் தெற்கு | நல்லையா மஹால், மீன்சுருட்டி |
| இரவு 07.00 மணி | தா.பழூர் கிழக்கு | கேசவன் மஹால், தா.பழூர் |

**அமைச்சர் சா.சி.சிவசங்கர்**
செயலாளர்
அரியலூர் மாவட்ட தி.மு.க.

### எஸ். தயாள்ராஜ் நிகழ்ச்சி ஏற்பாடு!

# வேலூர் - சைதாப்பேட்டை பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. - தி.அ. முகமதுசகி சிறப்புரை!

வேலூர், ஆக. 30-

வேலூர் மாவட்ட மாநகர தி.மு.க. சைதாப்பேட்டை பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் 27.08.2024-செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி அளவில் ஓட்டல் ஜி.ஆர்.டி. அருகில் (கிரின் சர்க்கள்) சாந்தி மஹால் ஏ/சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநரக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேலூர் மாவட்ட மாநகர தி.மு.க. சைதாப்பேட்டை பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் 27.08.2024 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி அளவில் ஓட்டல் ஜி.ஆர்.டி. அருகில் (கிரின் சர்க்கள்) சாந்தி மஹால் ஏ/சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் பி. ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையேற்றார். வரவேற்புரை பகுதி செயலாளர் எஸ். தயாள்ராஜ் வரவேற்புரையாற்றினார். பொதுக்குழு உறுப்பினர் சி.சந்திரசேகரன் எம்.சி., வட்டச் செயலாளர்கள் எஸ்.குமார், எஸ்.சண்முகம், வி.எஸ்.முருகன் எம்.சி., எல்.கே.சேதுராமன், பகுதி நிர்வாகிகள் டி.சத்தீஷ்குமார், லட்சுமி வெங்கடேசன், கு. ஏகாம்பரம், வ.மதியழகன், கே.பி. ரவி, டி.ராஜா, கே. முரளி, ப.பைரஸ்பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன், எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர், தணிக்கை குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர துணைச் செயலாளர் ஏ.ஆர். முன்னாஷெரிப், சத்துவாச்சாரி மண்டலக்குழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் இக்கூட்டத்தில் எம்.நூருல்லா, டாக்டர் எம்.ராஜேஸ்வரி, ஜி. ரமேஷ், சூரி (எ) அ.கோவிந்தன், ஒய்.தேவனேசன், தங்கமணி ஆனந்தன், வி.ஜி.கே. சுந்தரவிஜி, ஜி. பாலமுரளி கிருஷ்ணா, ஆர்.கே. ஐயப்பன், பி.முருகபெருமாள், எஸ்.கதிரேசன், மா.ப. அன்புநிதி, பி.எம். தேவராஜ், தர்வாம்பாள் குப்புசாமி, எம்.சி., யு.ரவிக்குமார், வி.எம்.டி.ஏ. பாலாஜி, என்.சுகுமாறன், சையத் இப்ராஹிம் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் பின் வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் தமிழக இளைஞர்களின் எதிர்கால வாழ்வாதாரம் மேம்படவும் 27.08.2024 அமெரிக்க நாட்டிற்கு சென்று தொழில் முதலீடுகளை தமிழகத்திற்கு ஈர்க்கும் வகையில் பயணம் மேற்கொள்ளும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெறவும், தொழில் முதலீடுகள் தமிழகத்தில் குவிந்திடவும் சைதாப்பேட்டை பகுதி தி.மு.க. சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

முத்தமிழறிஞர் நம் நெஞ்சமெல்லாம் என்றும் நினைவில் வாழும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு நூறு ரூபாய் சிறப்பு நாணயம் ஒன்றிய அரசால் வெளியிடுவதற்கு பெரும் முயற்சி எடுத்து அதில் வெற்றி கண்ட கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் கழகத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல பெருந்தன்மையுடன் ஒன்றிய அரசின் சார்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு நூறு ரூபாய் சிறப்பு நாணயத்தை வெளியிட்டமைக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நம் கழகத் தலைவர் 40க்கு 40 என்ற முழக்கத்தை முன்னிறுத்தி வெற்றி கண்டது போல வரும் 2026ல் நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அவர்கள் 200 தொகுதியில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்துள்ளதை தொடர்ந்து நம் பகுதியில் உள்ள ஒவ்வொரு கழகத் தோழர்களும் குறிப்பாக வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகமும், மாநகர கழகமும் சொல்கின்ற பணிகளை சுணக்கமில்லாமல் அரும்பாடுபட்டு பணியாற்றிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பகுதிக் கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வட்ட கிளை அமைப்புகளில் செப்டம்பர் 2024, 15ஆம் தேதிக்குள் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி கூட்டத்தின் நடவடிக்கைகளை (மினிப் புத்தகம்) தலைமை கழகத்திற்கு அனுப்பிட ஏதுவாக உரிய நிர்வாகிகள் தத்தம் அமைப்புகளில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்திட ஆயுத்தமாக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கழக நிர்வாகிகளையும், தொண்டர்களையும் எப்பொழுதும் கழக உணர்வுடன் வைத்திருக்க ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும் கழக முப்பெரும் விழா நடைபெறுவது வாடிக்கையாகும். இந்த ஆண்டிற்கான கழக முப்பெரும் விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும் தேதியில் நிகழவிருக்கும் இடத்தில் பகுதி தி.மு.க. சார்பில் பெருமளவில் நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு பகுதிக்கு நற்பெயர் ஈட்டிட வேண்டுமென கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

வரும் 2025 ஜனவரி 1ஆம் தேதி தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிகள் முதல் கட்ட பணியாக மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி தற்போது அப்பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது அக்டோபர் 18ஆம் தேதி வரை (BLO) வாக்கு சாவடி அலுவலர் ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று வாக்களர் பட்டியலை சரி பார்த்தல், வாக்கு சாவடி மறு சீரமைப்பு, வாக்களர் புகைப்பட பட்டியலில் உள்ள முரண்பாடுகளை களைதல், வாக்களர் பட்டியலில் வாக்களர்களின் சரியான புகைப்படங்களை இணைத்தல். இப்பணியினை BLA2 மற்றும் கழக தோழர்கள் உடன் இணைந்து பணியாற்றிட வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகளுக்கு நினைவு பரிசாக முத்தமிழர் கலைஞர் அவர்களின் உருவம் பதித்த சுவர் கடிகாரம் மற்றும் கை கடிகாரம் வழங்கப்பட்டது.

இறுதியாக பகுதி துணைச் செயலாளர் மு.கோபி நன்றியுரையாற்றினார்.




கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கயத்தாறு மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதாஜீவன் உரையாற்றினார். இதில் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், கயத்தாறு மேற்கு ஒன்றியச் செயலாளர் கழுகுமலை சுப்ரமணியன், நகரச் செயலாளர் குமார், கழுகுமலை பேரூர்ச் செயலாளர் கிருஷ்ணகுமார், கழுகுமலை பேரூராட்சித் தலைவர் திருமதி.அருணா சுப்பிரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மகாராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.